**18.02.2026**

அ.வ.எண். **2/2023**

<u>வா.சா.**2** ராஜேந்திரன் குறுக்கு விசாரணை</u>

**1**. நான் இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் ச்ர்வே எண் எனக்கு ஞாபகமில்லை, தெரு பெயர் மற்றும் கதவு எண் தெரியும். வாதி பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்தை தொந்தரவு செய்ய கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளனர். எந்த தேதி, மாதம், வருடம் பிரதிவாதிகள் தொந்தரவு செய்தார்கள் என்றால் **2021**ம் வருடம் மாதம் எனக்கு தெரியாது. பிரதிவாதி வாதிக்கு கிரையம் கொடுத்த சொத்தை மீண்டும் பிரதிவாதிக்கே விற்பனை செய்ய சொல்லி தொந்தரவு செய்து வருகிறார்கள். அதனால்தான் வாதி இந்த வழக்கை பிரதிவாதிகள் மீது தாக்கல் செயதுள்ளார்கள் என்றால் சரிதான்.

**2**. தாவாசொத்தை பிரதிவாதி நேரடியாக வாதிக்கு விற்பனை செய்தாரா என்றால் பொது அதிகாரம் முகவர் மூலம்தான் வாதிக்கு தாவாசொத்தை கிரையம் கொடுத்தார். மற்ற சொத்துகள் பிரதிவாதி அவ்வாறுதான் விற்பனை செய்தார். பொது அதிகார முகவர் வாதியின் கணவர் என்றால் சரிதான். வாதியின் கணவர் குமஸ்தா வேலை செய்து வந்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி பொற்சிலை கணவர் வழக்கறிஞர் என்றால் சரிதான். பிரதிவாதி கணவரிடம் வாதியின் கணவர் வேலை செய்தார் என்றால் சரிதான். பிரதிவாதி கணவர் எப்போது இறந்தார் என்றால் வருடம் ஞாபகமில்லை. என்னிடம் காட்டபடும் ஆவணம் நான்

இவ்வழக்கின் பிரதிவாதி  பொற்சிலை மீது தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.86/2017 ன் பிராது நகல் ஆகும் என்றால் சரிதான். (அது பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யபடுகிறது). ( சாட்சி தானாக முன்வந்து பிரதிவாதி பொற்சிலை தன்னுடைய கடையின் அருகில் உள்ள பைப்லைன் மூலம் தண்ணீர் வருவதை நிறுத்தியதால் தான் பிரதிவாதி பொற்சிலை மீது வழக்கு தாக்கல் செய்தேன் என்று சாட்சி கூறுகிறார் )

**3**. மேற்சொன்ன வழக்கில் சர்வே எண் கடையும் தாவாசொத்தில் உள்ள கடையும் ஒரே சர்வே எண்ணில் உள்ள கடைதான் என்றால் சரிதான். மேற்சொன்ன அசல் வழக்கு எண்.86/2017 ல் பிரதிவாதி பொற்சிலை என்னை தொந்தரவு செய்ததாக கூறி தாக்கல் செய்துள்ளேன், ஆனால் அதற்கு முன்பிலிருந்தே பிரதிவாதி பொற்சிலை என்னிடமும் இவ்வழக்கின் வாதியிடமும் தொந்தரவு செய்து வந்தார் என்றால் சரியல்ல.  என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் அறிவிப்பு யார் யாருக்கு அனுப்பினார்கள் என்றால் நான் பிரதிவாதி பொற்சிலைக்கு அனுப்பினேன். அது பி.சா.ஆ.2 சாட்சியின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. ( சாட்சி அதன்பின்பு பிரதிவாதி பொற்சிலை என்னை காலி செய்ய சொன்னதால் நான் பிரதிவாதி பொற்சிலை ஏற்கனவே சொத்தை விற்று விட்டதால் அவருக்கு உரிமை இல்லை என்று கூறி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் ).

**4**. பிரதிவாதியுடன் 2013ம் வருடத்திலிருந்தே நான் பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதியிடம் பிரதிவாதி 2013ம்

வருடத்திலிருந்து வழக்கு தாக்கல் செய்த தேதிவரை காலி செய்ய சொல்லி பிரச்சனை செய்தார் என்றால் சரியல்ல. (சாட்சி பிரதிவாதியின் மருமகன் தாவாசொத்தை திருப்பி தர சொல்லி கேட்டதால்தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்தார் ).

**5**. பிரதிவாதியின் மகனுக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. எனது பிரமாணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் பொய், வாதி எனக்கு தெரிந்தவர் என்பதாலும் பிரதிவாதியுடன் இருந்து முன் விரோத காரணத்தினாலும் வாதிக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.